
## III. வேதவினா குறுக்கெழுத்துப் போட்டி - 75

### ஆதியாகமம் 1-5 அதிகாரங்கள்



Book - Post

பெறுநர் : திரு/திருமதி

↓↓↓

1. ஆண்டு கொள்ளுங்கள் என்று மனிதனுக்கு கீழ்ப்படுத்தப்பட்டவை. (8)
2. பூமியிலிருந்து எழும்பி பூமியை நனைத்தது. (4)  3. லாமேக்கின் மனைவி (3)
15. நாசியிலே கர்த்தர் ஊதி போது மனிதன் ..........வானான்.(3) கடைசி 3 எழுத்துக்கள் ←

→→→

1. அவள் ...................... எல்லாம் தாயானவள். (8)
3. பைசோன் ஆறு சுற்று ஓடும் தேசம் (3)
4. ஆதாமுக்கு ஏற்ற துணையை உருவாக்கு தேவன் எடுத்த எலும்பு (2)
7. வருத்ததோடே அதன் ...................ப் புசிப்பாய். (3)
9. ஆகாய விரிவுக்கு தேவன் இட்ட பெயர் ....................(3) ↓
10. தேவன் ஆதாமுக்கு கொடுத்த உடை ...................... (2)
11. கேனானின் தகப்பன் (3)
12. சில்லாள் பெற்ற குமாரன். (3) கடைசி எழுத்து ↑
14. ஆபேலுக்கு பதிலாக தேவன் கொடுத்த குமாரன் (2)
16. கர்த்தர் உண்டாக்கிய தோட்டம் ............... என்றான். (3)
18. கர்த்தர் மனிதனின் நாசியில் ஊதியது.

←←←

5. விலா எலும்பிலிருந்து எடுக்கப்பட்ட அவளை ஆதாம் ......... எனப்டுவான்.(3)
6. கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த .................. வரப்பண்ணினார். (4)
11. காயீன் கட்டிய பட்டணம். (3)
13. மனுஷனை சிருஷ்டித்த நாளிலே அவனை ............. உண்டாக்கினார். (6)
16. ....................ஓய்ந்திருந்தார். (6)
17. பைசோன் ஆறு சுற்றி ஓடும் தேசத்தில் விளைவது. (2)

↑↑↑

8. காயீன் கர்த்தருடைய சந்ததியை விட்டுப் புறப்பட்டுப் போன தேசம்.
11. மனுஷிக்கு ஆதாம் இட்ட பெயர். (3)
15. தோட்டத்தின் நடுவிலிருந்த மரம். (7)



SSA

# ஆரோனின் துளிர்த்த கோல்

வேதம் அறிவோம், தேவர்களாவோம்

THE SPROUTED STAFF OF AARON

மாத இதழ் : நவம்பர் 2018

## ஆதியாகமம் 3 : 15

உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுங்குவாய்.

★★★★★

## நவம்பர் மாதம் நாட்டின் சிறார் குதூகலிக்கும் மாதம்

ரோஜாவின் ராஜாவாம் நேரு மாமாவை நினைவுகூறும் மாதம்.
'சிறுபிள்ளைகள் என்னிடம் வர தடைசெய்யாதிருங்கள்'
என சீஷர்க்கு கட்டளையிட்டு சிறுவர்களை சீராட்டினார் இயேசு.
'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' ஒரு பழமொழி;
பிள்ளையை நடக்க வேண்டிய வழியில் நடத்து, முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான் என்கிறது நீதிமொழி.
சிறுவயது முதல் பிள்ளைகளை பக்தியில் வளர்த்திடுவோம்;
ஆலயம் செல்ல அலட்சியம் வேண்டாம், அசதியும் வேண்டாம்;
ஓய்வுநாள் பள்ளிக்கு ஒழுங்காக அனுப்பி வைப்போம்;
வசனங்கள் கற்பதற்கு வழிகள் வகுத்திடுவோம்;
ஊழியம் செய்திட உளமார ஊக்கம் ஊட்டிடுவோம்;
வீட்டிற்கொரு ஊழியரை உருவாக்கி வேதத்தைப் பரப்பிடுவோம்;
விண்ணக வேந்தனின் வியத்தகு ஆசியைப் பெற்றிடுவோம்.

- D. சுதந்திரதேவி, ஈச்சம்பட்டி

**அன்புடையீர், வணக்கம்.**

என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?
என்று கதறும் வார்த்தை என்னையா தயாபரரே
என் செவியிற் கேட்கலையோ? – ஜெபமாலை : 85

11 மத். 27:46 – இயேசு கிறிஸ்துவின் ஜெப வாழ்க்கைகல்வாரி சிலுவையிலும் தொடர்கின்றது. அவர் சிலுவையில் மொழிந்த முதல், மைய, முடிவு வார்த்தைகள் ஜெபமாக இருக்கின்றன.

உலகத் தோற்றத்துக்கு முன் குறிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியே கிறிஸ்து ஆவார். அவர் ஊழியப்பாதைக்கு வரும் முன் "இதோ உலகத்தின் பாவத்தை சுமந்த தேவஆட்டுக்குட்டி" என ஸ்நானகனால் வெளிப்படுத்தப்பட்டார்.

"உங்கள் அக்ரமங்களை உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகின்றன" (ஏசா. 59:2) பிதாவானவர் நாம் அவருக்குள் நீதியாகும்படி அவரை நமக்காக பாவமாக்கினார். (2 கொரி. 5:21) நம்மில் நீதியில்லை; அவரில் பாவமில்லை. நாம் நீதியாக வேண்டுமானால் அவர் பாவமாக வேணடும். சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவின் மீது நமது பாவங்கள் அனைத்தும் சுமத்தப்பட்ட போது, தீமையைப் பார்க்க மாட்டாத சுத்தக் கண்ணனாகிய பிதா தமது முகத்தைக் குமாரக்கு மறைத்தார். இயேசு கைவிடப்பட்டவரானார். கசப்பும் வெறுப்புமான பாத்திரத்தில் பானம் பண்ணினார். இந்நிலையில் அவர் ஏறெடுத்த ஜெபமே இவ்வசனமாகும்.

வனாந்திர சோதனையில் தேவதூதர்கள் பணிவிடை செய்தார்கள். கெத்டேமனே தோட்டத்தில் வியாகுல வேளையில் தேவதூதர்கள் பணிவிடை செய்தார்கள். ஆனால் இப்பொழுது எவ்வித ஆறுதலும் தேறுதலும் இல்லாததால் எந்நேரமும் இணைபிரியாதிருந்த பிதாவிடம் ஏன் என்னை கைவிட்டீர் என்ற இந்த ஜெபம் தேவையாயிற்று.

இயேசு உலகின் பாவத்தைச் சுமந்து நின்ற இந்நேரத்தில் காரிருளில் நிகழ்ந்த ஒரு கடும் போர் என்றே குறிப்பிடலாம். சாத்தானின் சர்வ சேனைகளும் பலமாய் அவரை எதிர்த்து போராடின. பாவத்தின் பலனான மரணத்தோடு போராடினார். H.A. கிருஷ்ணபிள்ளை "இயேசு நாதர் ஒரு ஆத்துமாவைக் கூட அழியவிடாமல் கொடுமையான தண்டனை என்கிற நெருப்பு ஆற்றில் ஆத்துமாக்கள் அத்தனையையும் இரண்டு பக்கத்திலும் இடுக்கிக் கொண்டு இந்த மரண நெருப்பாற்றைக் கடந்தார்" என அழகாக எழுதியுள்ளார்.

கடவுளின் சித்தத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்த – வெறுமைநிலை இது.

இதன் மூலம் இயேசு மார்த்தாளுக்குச் சொன்ன வார்த்தைகள்:

"உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" என்ற கூற்று மெய்பிக்கப்பட்டுள்ளது. அவரை சொந்தமாக்கிக் கொள்ளுகிறவர்கள் மரணத்தைவிட்டு நீங்கி இப்பொழுது ஜீவனுக்கு பிரவேசிக்கிறார்கள். அல்லேலூயா!

**ஜெபம் பற்றிய பேருண்மைகள் தொடரும்...**



## கடந்த மாத வேதவினா போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் செல்வி / செல்வன்/ திருமதி / திருவாளர்.

**I.** 1. ஷரன்ரூத், ஹெப்சி பானுமதி

**II.** 1 . அன்னமேரி ராஜ், 2. வர்ஜீனியா, 3. தேவதாஸ் செல்வக்குமார், 4. பியூலா அன்புமலர், 5. மாலின் சுரேஷ்

**I & II.** 1. சூசன் சுமித்ரா, 2. ஒலிவியா லாங்டன், 3. மிராண்டா, 4. ஜேம்ஸ், 5. மெர்ஸி சுரேஷ்குமார், 6. ஆலீஸ் ஜோசியா

**I & III.** 1. ஜெயசீலி ஜெயராஜ், 2. கமலா ஜார்ஜ்

**II & III.** 1. T. சுகந்தா, 2. சுகந்தி ஜோன்ஸ், 3. சாந்தி குணா, 4. சுகுணா எலிசபெத், 5. டெய்சி லிடியா ஜெயசீலன், 6. ஜாய்ஸ் மணிமொழி, 7. காந்தா மனோகரன், 8. கவின் ஹென்றி, 9. சிந்தியா, 10. ரோப்பா கிறிஸ்டல், 11. செல்வமணி, 12. சுதந்திரதேவி, 13. கிறிஸ்டோபர் கிப்ட்ஸன், 14. ரூத், 15. விமலாராணி சர்ச்சில், 16. ஃபான்சி, 17. தேவகி, 18. மல்லிகா எட்வின், 19. சாந்தி செல்லையா, 20. சுபா வணக்கராஜ், 21. நகோமி குளோரி, 22. ஜூலியட் சுபமங்களா, 23. சலோமி, 24. லிடியா காந்தன், 25. லூசி ஞானபரணம், 26. பிரீடா, 27. அன்னா.

**III.** 1. குணதிலகா யோனத்தான், 2. ரத்னம் விமலாபாய், 3. ஜெயசீலி செல்லையா, 4. சகுந்தலா தனராஜ், 5. சித்ராபாபு,

**I, II, III:** 1. ரூபல்லா அற்புதராஜ், 2. கிறிஸ்டபல் நிர்மலா, 3. விமலா ரோசபெல், 4. ரெஜினாமேரி, 5. மனோகரன், 6. மல்லிகா ஜாய்ஸ், 7. ஹெலன் சேசுராஜ், 8. பாலின் மார்டீன், 9. ஜெயசீலி ரவிச்சந்திரன், 10. ஜாய் ஜோசப், 11. ஜாக்குலின் உஷா, 12. ஜூலா கிரேஸ், 13. அன்புக்கமலம், 14. ருவல்யா அருள்பிரகாசம், 15. ஜாஸ்மின் உஷாராணி, 16. ஜெயசீலி பால்ராஜ், 17. ஷாலினி இம்மானுவேல், 18. விமலா குழந்தைசாமி, 19. ரெபேக்காள் ஐசக், 20. ஜூலியா சார்லி, 21. சாந்தி வில்லியம், 22. கலாவதி தயாளகரன், 23. மோனிகாள் காந்திநாத், 24. பியூலா ஜேசுராஜன், 25. செலைன் ராணி டேவிட், 26. சாந்தி ஜோயல், 27. பாக்கியராணி, 28. ஐவி கலாவதி, 29. கீத்தா கிறிஸ்டோபர், 30. கிரேஸ் பிராங்கிளின், 31. சந்திரா இம்மானுவேல், 32. எலிசபெத், 33. ஸ்நேகா, 34. தேவகிருபா, 35. மெர்ஸி இன்பராஜ், 36. ரோசலின் திலகவதி, 37. நிர்மலா டேவிட், 38. ஷீலா பாலகுமார், 39. ஜேனட் குணா, 40. ராணி சாந்தகுமார், 41. ரீட்டா ரோசலிண்ட், 42. மனோகரி பெஞ்சமின், 43. எஸ்தர் ராஜேந்திரன், 44. நகோமி எடிசன்

பரிசு பெறுபவர்கள் :

1. திருமதி. **நிர்மலா டேவிட்,** திருச்சி 2. திருமதி. **சாந்தி வில்லியம்,** புதுக்கோட்டை
3. திருமதி. **மல்லிகா ஜாய்ஸ்** திருச்சி.

**உலக சரித்திரத்தில் யூதர்களின் நிலை :**





## எபேசியர் 6–ம் அதிகாரம் தொடர்கிறது

**6–ம் அதிகாரம் வ. 10–18,** விசுவாசிகளாகிய நாம் ஓர் ஆவிக்குரிய யுத்தம் செய்து கொண்டிருக்கிறோம். நாம் பிசாசை சார்ந்திராத்தினால் (அடிமைகளாயிராததினால்) எந்நேரமும் பிசாசு நம்மை தாக்க முற்படுகிறான். ஆகவே நாம் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை எடுத்துக் கொண்டு, பிசாசின் தாக்குதலை எதிர்தது, தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் நிற்க வேண்டும்.

1. கச்சை – சத்தியம் – பிசாசு பொய்யினால் நம்மோடு யுத்தம் செய்கிறான். அவனுடைய பொய்கள் அநேக நேரம் உண்மை போல நமக்கு தொனிக்கும். நாம் கர்த்தருடைய உண்மையை (சத்தியத்தை) அறிந்தவர்களாய் பிசாசின் பொய்களை மேற்கொள்ள வேண்டும்.

2. மார்கவசம் – நீதி – பிசாசு நம்முடைய இருதயத்தை நான் அடிக்கடி தாக்குவான். நம் இதயம் நம்முடைய உணர்வுகளுக்கும், நம்பிக்கைக்கும் ஆதாரம். நீதியாகிய மார்கவசம் நம்முடைய இருதயத்தை பாதுகாக்கிறது.

3. பாதரட்சை – சுவிசேஷத்தினால் உண்டாகும் சமாதானம் – மற்றவருக்கு சுவிசேஷத்தை அறிவிப்பது பயனற்றது, என பிசாசு நம்மை நினைக்க வைப்பான். இந்த பேலை மிகப் பெரியது, எதிர்ப்புத்தான் அதிகதம் என நம்ப வைப்பான், ஆனால் இந்த ஆயுதம் தான் நம்மை தேவனுடைய உண்மையான சமாதானத்தை மற்றவருக்கு கூற ஏவுகிறது.

4. கேடகம் – விசுவாசம் – சோதனைகள், பின்னடைவுகள், Insults மூலம் பிசாசு நம்மை தாக்க முற்படுகிறான். ஆனால் இந்த அக்கினி அம்புகளை எல்லாவற்றிலிருந்தும் விசுவாச கேடகம் நம்மை பாதுகாக்கிறது. நம்முடைய நடப்பு சூழ்நிலையை தாண்டி நாமே வெற்றியாளர்கள் என காணச் செய்கிறது.

5. தலைசீராய் – இரட்சிப்பு – நாம் தேவனை, இயேசுவை, அவருடைய இரட்சிப்பை சந்தேகப்படும் படி சாத்தான் விரும்புகிறான். தலைசீராய் நம்முடைய மனதை தேவன் நமக்காய் செய்த ரட்சிப்பின் கிரியையை சந்தேகப்படாதபடி காக்கிறது.


6. பட்டயம் – தேவவசனம் – இது மாத்திரம் தான் எதிர்த்து தாக்கக் கூடியது. மற்ற எல்லா ஆயுதமும் நம்மை எதிரியின் முயற்சியினின்று பாதுகாக்கும். வேதவசனம் மாத்திரம் எதிர்த்து தாக்கவல்லது நாமும் இயேசுவை போல பிசாசை எதிர்க்க வசனமாகிய பட்டயத்தை எடுப்போம்.

முடிவாக எந்த சமயத்திலும் ஆவியினால் ஜெபம் செய்தல் வேண்டும். சகவிசுவாசிகளுக்காய், உலகமெங்குமுள்ள சபைகளுக்காய் ஜெபித்தல் வேண்டும்.

**6–ம் அதிகாரம் வ. 19–24,** முடிவாக பவுல் தனக்காக ஜெபிக்கவும் வேண்டுகிறார். இக்கடிதம் எபேசு சபைக்கு மட்டுமல்ல, பிற சபைகளுக்கும் சறு கடிதமாக பவுல் எழுதியிருக்கிறார். இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்பு கூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக என வாழ்த்தி பவுல் கடிதத்தை முடிக்கிறார்.

**SSA - 19:** அடுத்த ஆண்டின் வேதாகம தேர்வு ஆதியாகமம் நூலிலிருந்து வலைதளத்தின் மூலம் நடைபெறும் இது குறித்த முழு விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

# I. READ AND RECOGNISE : 21




Read and Recognise, வேதாகமப் புதிர்,
வேதவினா குறுக்கெழுத்துப் போட்டிகளில்
அனைவரும் பங்கு பெறலாம். **25.11.2018**க்குள்
விடை அனுப்பப்பட வேண்டும்.
குலுக்கல் முறையில் பரிசுகள் உண்டு.


பதில் அனுப்பப்பட வேண்டிய முகவரி :
திருமதி. **ஷர்ளி காலின்ஸ்**
120/4, சீயோன் ஆலய வளாகம்,
திருச்சி – 620 008.


**97914 09192** என்ற அலைபேசி எண்ணுக்கு கருப்பு மையில் பதிலையும் பெயரையும் தெளிவாக எழுதி **Whatsapp** மூலம் பதிலை அனுப்பலாம்.

## Guidelines :

a. Bible Portion : Mark 5 & 6 Chapters

b. All answers begin with the letter " L "

c. Letters can be used any number of times. d. Give the reference.

**Questions :**

1. It is not ........................ for you to have your brother's wife.
2. How many ................. do you have?
3. My name is ...................... for we are many.
4. After the had taken .................... of them, he went up on the mountain to pray.
5. When his disciples heard of it, they came and took his body and .................. it in a fomb.
6. My .................... daughter is at the point of death.
7. When they had crossed over, they came to ............... at Gennesaret and moored to the shore.
8. Jesus .................. around to see who had done it.
9. When jesus said that the child is not dead but sleeping the people .................... at him.
10. "Go home to your friends and tell them how much the ............. has done for you and how much he had mercy on you."

**Answers : I. Read and Recognise : 20** (Mark 3 & 4)

| | | |
|---|---|---|
| **1. whole 4:1** | **4. went 4:3** | **8. word 4:14** |
| **2. withdrew with 3:7** | **5. watch, whether 3:2** | **9. whoever, will 3:35** |
| **3. wild storm, waves, were 4:37** | **6. when, withered 4:6** | **10. whenever 3:11** |
| | **7.went 3:13** | |



# II. வேதாகமப் புதிர் - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| றா | மு | ணா | ளி | றொ | ட | சு | ள் | வா | ஏ |
| சே | க | வா | ன | ம் | ண் | ட | க் | ழா | தே |
| த் | நா | ம் | ணு | மா | ம | ர் | ம் | ய் | ன் |
| நோ | ழ | சி | ய் | கி | மு | நா | பூ | ண் | டு |
| ண் | ரு | ரு | யி | வா | ள | ல | மி | தி | து |
| பு | க் | ம | த் | லே | வி | டு | ஞ | ல | ந் |
| ம் | கு | ல் | எ | ரி | ச் | ச | ல் | தோ | ஜ |
| தா | பே | து | த | த் | னை | ந | நீ | யி | வ |
| ஆ | கா | ர | ம் | ச | ட் | ரு | வி | வ | ஜீ |

**எபேசியர்**
**3 – 6**
**அதிகாரங்கள்**

1.இவ்வேத பகுதியில் உள்ள 23 வார்த்தைகள் குறுக்கும் நெடுக்குமாக, வல இடமாக, மேலும் கீழுமாக இடம் பெற்றிருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்து வசன இருப்பிடம் எழுதி வரிசைப்படுத்தவும்.

2. சிதறியுள்ள 22 எழுத்துக்களை ஒழுங்குப்படுத்தினால் தேவன் ஆதாமுக்கு கொடுத்த சாபத்தின் இறுதி பகுதி வெளிப்படும்.

**II. வேதாகமப் புதிர் - 20 விடை**
**பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள் - எபே. 4:27**

## MARK 10:13-16

"No children please!" These words are seldom voiced, but they're often assumed when we are invited to hear a prominent speaker, teacher, or leadar. The assumption is that children wouldn't know what's going on and they might annoy the speaker.

In Mark 10:13-16, the Lord's disciples made a similar assumption about children and Jesus. But He was displeased when His disciples rebuked parents who brought their little ones to be blessed. Jesus knew that children, with their receptive hearts, were closest to His kingdom.

Many years ago, missionary Robert Moffat learned the importance of not overlooking children. Only a few people had come to one of his meetings because of bad weather. Although disheartened, he preached his message, not noticing a small boy who was operationg the bellows of the organ. Before Moffat was finished, that boy had decided to become a missionary. His name was David Livingstone, who grew up to become God's poineering servant in Africa.